**கொழும்பு மாவட்டத்திலுள்ள கமநல சேவை குழுக்கம் - 2022**

---

**1. கணக்காய்வு அபிப்பிராயம்**

**1.1** கொழும்பு மாவட்டத்திலுள்ள 09 கமநல சேவை குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 58(1) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

**1.2** 2022 ஆம் ஆண்டிற்காக கொழும்பு மாவட்டத்திலுள்ள 09 கமநல சேவை குழுக்கள் தொடர்பாக முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டது. அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்கள்**

**1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை உள்ளடக்கி கணக்கீட்டு கொள்கைகளுடனான இணக்கமின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 05 கமநல குழுக்களின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் அனைத்தும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் தொடர்புபடுத்தப்பட்ட சில கணக்கீட்டு கருதுகோள்கள் மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கொஸ்கம மற்றும் கஹதுடுவ கமநல சேவை குழுக்கள் தெரியப்படுத்தியுள்ளதுடன் கோட்டே, ஹோமாகம மற்றும் பாதுக்கை கமநல சேவை குழுக்களினால் பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 21(இ) பந்தியின் பிரகாரம் 09 கமநல சேவை குழுக்களினால் தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களுக்கான படிவத்தில் அது உள்ளடக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஒரு விவசாய சேவை குழுவின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பல்வேறு இருப்புக்களின் முழு மொத்தப் பெறுமதி ரூபா 793,297 ஆக இருந்த போதிலும் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் அந்த இருப்புக்களுக்குரிய பெறுமதியாக பொருண்மையான இருப்புக் கணக்கின் பிரகாரம் பெறுமதியாக மொத்தமாக ரூபா 1,540,571 குறிப்பிடப்பட்டதனால் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட உள்ளபடியான இருப்பின் பெறுமதி காட்டப்பட்டிருக்காததன் அடிப்படையில் பௌதீக ரீதியாக இல்லாத ரூபா 747,274 பெறுமதியான இருப்பு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்தாக காட்டப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | இருப்பு பெறுமதிகள் சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ஒரு கமநல சேவை குழுவின் ஆரம்ப திரணட நிதியின் மீதியான ரூபா 3,814,822 தொகைக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 581,366 செம்மையாக்கியதன் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,396,189 ஆக திரண்ட நிதியத்தின் மீதி நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தும் மேற்கூறிய செம்மையாக்கல்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் மற்றும் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | திரண்ட நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட செம்மையாக்கல்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட நாட்குறிப்புக்கள் பேணப்படுதல் வேண்டும். |

### 1.3.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 04 கமநல சேவை குழுக்களின் 12 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களுக்கும் துணை அறிக்கைகளுக்குமிடையேயான மீதிகளில் மொத்தமாக ரூபா 972,052 ஆன கணக்கிணக்கமின்மை காணப்பட்டது. | 02 கமநல சேவை குழுக்கள் எதிர்காலத்தில் அத்தகவல்களை சமர்ப்பிக்கும் எனவும் ஏனைய கமநல சேவை குழுக்கள் பதில் சமர்ப்பித்திருக்கவில்லை எனவும் தெரிவிக்கிறேன். | கணக்கிணக்கமின்மைக்குரிய காரணங்களை பரீட்சித்து சரிசெய்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமு. |

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஒரு கமநல சேவை குழு 06 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து முன்கொண்டு வந்திருந்த தொங்கல் கணக்க வரவு மீதி ரூபா 222,625 மற்றும் ரூபா 260,839 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதி மற்றும் இன்னும் ஒரு கமநல சேவைக் குழு ஒரு ஆண்டிற்கு முன்பிலிருந்து முன்கொண்டு வந்திருந்த ரூபா 254,065 தொகையான தொங்கல் கணக்கின் வரவு மீதி தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேடிப்பார்த்து தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கொஸ்கம கமநல சேவை நிலையத்தினால் தெரியப்படுத்தியிருந்ததுடன் ஏனைய கமநல சேவைக் குழுக்கள் பதில் சமர்ப்பித்திருக்கவில்லை. | இந்த தொங்கல் கணக்கு மீதி பல ஆண்டுகளாக காணப்பட்டு வருவதனால் இந்த தொங்கல் கணக்கின் மீதிக்கான காரணத்தை துரிதமாக தேடிப்பார்த்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 08 கமநல சேவை குழுக்களின் சொத்துக்கள் ரூபா 25,194,349 தொகை தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு, மீதிகளை உறுதிப்படுத்துதல் மற்றும் காலப்பகுப்பாய்வு போன்ற சான்றுகள் இல்லாததுடன் 04 கமநல சேவை குழுக்கள் தொடர்பான பொறுப்புக்கள் ரூபா 2,737,378 தொகைக்காக மீதிகளை உறுதிப்படுத்துதல், காலப்பகுப்பாய்வு மற்றும் பிணை வைப்பு பதிவேடு போன்ற சான்றுகள் இல்லாததன் காரணமாக அந்த விடயங்களை கணக்காய்வின் | பதில் வழங்கப்படவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதியை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்பு | | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| **(அ)** | **2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம்** | | | | |
| | (i) | 41 ஆம் பிரிவு | கொழும்பு மாவட்டத்தின் கமநல சேவை குழுக்கள் சம்பந்தமாக மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் ஒன்று மாத்திரம் நடாத்தப்படுதல். | ஆகக் குறைந்தது ஒரு காலாண்டிற்கு ஒரு கூட்டம் நடாத்தப்படுதல் வேண்டும். | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | 18 (4) ஆம் உப பிரிவு | கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தினால் கணக்காய்வுக் கட்டணத்திற்கான கணக்குகள் இன்வொயிஸ் திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் செலுத்தி தீர்த்துவைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் கொஸ்கம கமநல சேவை குழுவினால் 1996 இலிருந்து 2013 வரையான ரூபா 82,829 தொகை மற்றும் மாலபே கமநல சேவை குழுவினால் 1998 இலிருந்து 2008 வரை ரூபா 50,628 தொகையான கணக்காய்வு | கணக்காய்வு கட்டணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கொஸ்கம கமநல சேவை நிலையத்தினால் தெரியப்படுத்தியிருந்ததுடன் ஏனைய கமநல சேவைக் குழுக்கள் பதிலை சமர்ப்பித்திருக்கவில்லை. | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வுக் கம்டணத்தை செலுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கட்டணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | 38(1)(உ) ஆம் உப பிரிவு | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவைப்படுகின்ற வகையில் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனைத்து கணக்காய்வுக் குழுக்களும் பதில் வழங்கப்பட வேண்டிய போதிலும் ஹோமாகம மற்றும் மாலபே கமநல சேவை குழுக்கள் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையும் மஹரகம கமநல சேவை குழு 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையும் கொஸ்கம கமநல சேவை குழு 2019 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையும் நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வரைபு அறிக்கைக்கான பதிலை வழங்கியிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வரைபு அறிக்கைக்காக பதிலை வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | **2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டம்** | | | |
| (i) | 14 ஆம் பிரிவு | தகவல்களை தேடிக்கண்டு பிடிக்க முடியாமையால் குத்தகைக்கு விவசாயம் செய்பவர்களால் காணி | கமநல அபிவிருத்தி ஆணையாளரின் ஆலோசனைகள் வேண்டப்பட்டுள்ளது என கொஸ்கம கமநல சேவை | கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | உரிமையாளர்களுக்குச் செலுத்த வேண்டிய உரிமைப் பணமாக முன்னைய ஆண்டுகளின் போது கொஸ்கம, கஹதுடுவ, மஹரகம ஆகிய கமநல சேவை குழுக்களுக்கு கிடைத்த முறையே ரூபா 11,462, ரூபா 243,935 மற்றும் ரூபா 9,642 தொகைகளை அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குழுவினால் தெரியப்படுத்தப்பட்டிருந்ததுடன் நீதிமன்ற வழக்கு பூர்த்தியடையும் வரை தீர்த்துவைக்க முடியாது என கஹதுவ கமநல சேவை குழு தெரியப்படுத்தியுள்ளதுடன் ஏனைய கமநல சேவை குழுக்களினால் பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| | (i) | நி.பி 134(3) | கொழும்பு மாவட்டத்திலுள்ள கமநல சேவைக் குழுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற உள்ளகக் கணக்காய்வுப் பரீட்சிப்புக்களின் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை என கஹதுடுவ கமநல சேவை குழு தெரியப்படுத்தியிருந்ததுடன் கணக்காய்வுடன் இணங்குகிறேன் என கொஸ்கம கமநல சேவை குழு தெரியப்படுத்தியிருந்ததுடன் ஏனைய கமநல சேவை குழுவினால் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | நி.பி 757 (2)(அ) | பொருள் மீளாய்வுச் சபையின் அறிக்கை கிடைத்தன் பின்னர் அதன் பிரதி உடனடியாக | அந்த அறிக்கை மாவட்ட அலுவலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை என | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் மீளாய்வாண்டிற்காக 08 கமநல சேவைக குழுக்களின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கஹதுடுவ மற்றும் கொஸ்கம கமநல சேவை குழு தெரியப்படுத்தியிருந்ததுடன் ஏனைய கமநல சேவை குழுக்களினால் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (iii) | நி.பி 880 மற்றும் 881 | பொருட்கள் மற்றும் பணத்திற்கு பொறுப்பாக செயற்படுகின்ற காசேலையில் கையொப்பமிடுகின்ற 07 கமநல சேவை குழுக்களின் உத்தியோகத்தர்களால் பிணைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது என கஹதுடுவ மற்றும் கொஸ்கம கமநல சேவை குழு தெரியப்படுத்தியிருந்ததுடன் ஏனைய கமநல சேவை குழுக்களினால் பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க 2022 ஆம் ஆண்டிற்காக 09 கமநல சேவை குழுக்களின் மொத்தமாக ரூபா 7,095,770 மிகையும் 08 கமநல வங்கிகளின் மொத்தமாக ரூபா 2,552,161 மிகையும் காணப்பட்டது. 2,021 ஆம் ஆண்டில் 09 கமநல சேவை குழுக்களின் மொத்தமாக ரூபா 4,195,335 மிகையும் 08 கமநல வங்கிகளின் மொத்தமாக ரூபா 2,603,405 மிகையும் காணப்பட்டது.

### 2.2.1 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

(i) மீளாய்வாண்டின் போது 09 கமநல சேவை குழுக்கள் ரூபா 7,095,770 மிகையை பெற்றுக்கொண்டிருந்ததுடன் அதற்கு நேரொத்தாக முன்னைய ஆண்டின் போது 08 கமநல சேவைக் குழுக்களின் மிகைகள் ரூபா 4,322,922 ஆகவும் ஒரு கமநல சேவை குழுவின் பற்றாக்குறை ரூபா 127,587 ஆகவுமாக மொத்தமாக ரூபா 4,195,335 மிகையாக இருந்தது. அதற்கிணங்க மிகையில் ரூபா 2,900,435 அதிகரிப்பு காணப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மஹரகம, ஹோமாகம, கெஸ்பாவ, கொலன்னாவ ஆகிய கமநல சேவை குழுக்களின் மிகைகள் பிரதான காரணமாக இருந்தது. அதற்கு கமநல அபிவிருத்தி ஆணையாளரின் எழுத்துமூல அனுமதி இல்லாது வயல் நிலங்களுக்கு மண் நிரப்பும் வழக்கு நடவடிக்கைகளிலிருந்து நீங்கி கொள்வதற்காக ஹோமாகம மற்றும் கொலன்னாவை கமநல சேவை குழுக்களுக்கு கிடைத்த முறையே ரூபா ஒரு மில்லியன்

மற்றும் ரூபா 0.8 மில்லியனான அன்பளிப்பு வருமானமும் மஹரகம மற்றும் கெஸ்பாவ கமநல சேவை குழுக்களில் மேட்டு நிலங்களை பதிவேட்டில் உள்ளடக்கும் சேவைக் கட்டண வருமானமும் காரணமாக இருந்தது.

(ii) கமநல சேவைக் குழுக்களின் தொடக்க செயற்பாடாக பசளை, விவசாய இரசாயனப் பொருட்கள், விதைகளும் நாற்றுக்களும், விவசாய உபகரணங்கள் என்பவைகளை உள்ளடக்கிய விவசாய கைத்தொழில் பொருட்களை விற்பனை செய்வதுடன் மீளாய்வாண்டிற்கு 09 கமநல சேவை குழுக்களின் முழு விற்பனையின் மொத்த தொகை ரூபா 35,678,090 ஆகும். முழுமையான மொத்த இலாபத்தின் மொத்த தொகை ரூபா 3,059,825 ஆக இருந்ததனால் அதற்கிணங்க ஒரு கமநல சேவை குழுவின் வருடாந்த விற்பனைப் பெறுமதி ரூபா 3,964,232 ஆக இருந்ததுடன் சராசரி மொத்த இலாபம் ரூபா 339,980 ஆகும்.

(iii) சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 கமநல சேவை குழுக்களின் நிதி நிலைமை தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| **நிதிச் சொத்துக்கள்** | **ரூபா** |
|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் | 72,603,997 |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 44,034,421 |
| | ..................... |
| | 116,638,418 |
| | .................. |
| **முழுப் பொறுப்புக்கள்** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 58,012,242 |
| நீண்டகால கடன் பெறுமதி | 7,874,299 |
| திரண்ட நிதியின் பெறுமதி (தேறிய சொத்துக்கள் | 50,751,877 |
| | .................. |
| | 116,638,418 |
| | .................... |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதி முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 03 கமநல சேவை குழுக்களிடம் காணப்பட்ட 05 நடைமுறைக் கணக்குகள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் அக்கணக்குகளில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 485,120 மீதி காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | செயற்பாடற்ற வங்கிக் கணக்கினை இன்னும் பேணுவதற்கான தேவைப்பாடு இல்லையாயின் அக்கணக்குகளை முறையான அங்கீகாரத்தின் |

| | | |
|---|---|---|
| | | அடிப்படையில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 வைப்புக் கணக்குகள் தொடர்பான தகவல்கள் மற்றும் வினைத்திறனான ஒரு முதலீட்டில் ஈடுபடுத்தாமை**

2022 திசெம்பர் 31 இ உள்ளவாறு 09 கமநல சேவை குழுக்கள் மற்றும் 08 கமநல வங்கிகளால் அரசாங்கத்தின் வணிக வங்கியில் பேணப்படுகின்ற நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட மீதிகள் மற்றும் அரசாங்கத்தின் வங்கிகளில் சேமிப்பு மற்றும் நிலையான வைப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| **நிறுவனம்** | **சேமிப்பு வைப்பு** | **நிலையான வைப்பு** | **நடைமுறை வைப்பு** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| குழு | 3,546,003 | 23,349,580 | 54,475,288 | 81,370,871 |
| கமநல வங்கி | 14,888,944 | 9,873,108 | 1,764,285 | 26,526,337 |
| | ............. | ............ | ............ | ............ |
| மொத்தம் | 18,434,947 | 33,222,688 | 56,239,573 | 107,897,208 |
| | ............ | ............ | ............ | ............ |

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| (அ) எந்த வட்டி வருமானமும் கிடைக்காத நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட மீதி ரூபா 56,239,573 ஆகும். | பதில் வழங்கப்படவில்லை. | நிதியத்தை மிகவும் வினைத்திறனான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) குறைந்த வட்டி வருமானம் கிடைக்கின்ற சேமிப்பு வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள பணம் ரூபா 18,434,947 கூட்டு மொத்தமாகும். அதற்கிணங்க பணம் வினைத்திறனாக ஈடுபடுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | நிதியத்தை மிகவும் வினைத்திறனான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |

**3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கொஸ்கம கமநல வங்கியின் கமத்தொழில் ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரினால் மேற்கொள்ளப்பட்டது என அறிக்கையிடப்பட்ட ரூபா 483,664 நிதி மோசடி தொடர்பாக அந்த உத்தியோகத்தரிடமிருந்து மேற்கூறிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இந்த நிதி மோசடி வெளிப்படுத்தப்பட்டு 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் உத்தியோகத்தருக்கு எதிராக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை இன் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29.4 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடக்க விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் பணத்தை அறவீடு செய்ததன் பின்னர் கணக்கறிக்கைகள் சரிசெய்யப்படும் எனவும் தெரிவிக்கிறேன். | உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் மூலம் இனங்காணப்பட்டுள்ள நிதி மோசடி சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கோட்டே கமநல சேவை குழுவின் அறிக்கையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 764,838 தொகையான இருப்பு பற்றாக்குறையில் ரூபா 81,623 தொகை பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருந்தும் மிகுதி இருப்பு பற்றாக்குறையான ரூபா 683,215 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் கமநல வங்கியில் இடம்பெற்றுள்ள ரூபா 564,741 நிதி மோசடி சம்பந்தமாக நிதிப்பிரமாணம் | பதில் வழங்கப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் மூலம் இனங்காணப்பட்டுள்ள நிதி மோசடி சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 104 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்து பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 444,741 ஆன அப்பண மோசடியின் பெறுமதி மாத்திரம் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | | |

**3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 09 கமநல சேவை குழுக்கள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டின் பெரும் போகத்தில் நெற் பயிற்ச் செய்கை மேற்கொள்ளக்கூடிய வயல் காணிகளின் அளவு 11,516 ஏக்கர்களாக இருந்த போதிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல் காணிகளின் அளவு 9,227 ஏக்கர்களாகும். தரிசாக உள்ள வயல் காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய வயல் காணிகளின் அளவு 1887 ஏக்கர்களானதுடன் அவற்றில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட காணிகளின் அளவு 348 ஏக்கர்களாகும். அதற்கிணங்க ஒட்டு மொத்தமாக நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளக்கூடிய வயல் காணிகளின் அளவில் 3,828 ஏக்கர்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளக்கூடிய வயல் காணிகளின் அளவினை நெற்பயிர்ச் செய்கைக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான திட்டங்களைத் தயாரித்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) பாதுக்கை கமநல சேவை குழுவின் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சேதனப் பசளை உற்பத்திச் செலவு முறையே ரூபா 89,946 மற்றும் ரூபா 1,040 ஆக இருந்த போதிலும் சேதனப் பசளை விற்பனை வருமானம் அவதானிக்கப்படவில்லை. கெஸ்பேவ கமநல சேவை குழுவின் 2021 மற்றும் 2022 ஆம் | பதில் வழங்கப்படவில்லை. | வருமானங்கள் செலவுகளை தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையில் சேதனப் பசளை உற்பத்திக் கணக்கு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சேதனப் பசளை விற்பனை வருமானம் முறையேய் முறையே ரூபா 19,600 மற்றும் ரூபா 424,900 ஆகவும் அவை தொடர்பான விற்பனை கிரயம் முறையே ரூபா 15,260 மற்றும் ரூபா 631,748 ஆகவும் இருந்ததனால் மொத்த இலாபம் முறையே ரூபா 4,340 மற்றும் 206,848 ஆன பாரிய வியாபார நட்டம் அவதானிக்கப்பட்டது. எனினும் சேதனப் பசளை உற்பத்திப் பிரிவின் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான உற்பத்திக் கிரயத்தினை இனங்காணக்கூடிய வகையில் தகவல்கள் ஆவணப்படுத்தப்படாத ஒரு அலகின் எதிர்பார்த்த உற்பத்திக் கிரயம் மற்றும் உள்ளபடியான கிரயத்தினை இனங்காண முடியாதிருந்தது. எவ்வாறாயினும சந்தை விலையினை அடிப்படையாகக் கொண்டு 20 கிலோ கிராம் பொதியானது ரூபா 700 வீதம் விற்பனை செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | 03 கமநல சேவை குழுக்களின் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக வீட்டுத் தோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 100,043 மற்றும் ரூபா 519,787 செலவு செய்யப்பட்டிருந்தும் வீட்டுத் தோட்ட வருமானம் முறையே ரூபா 16,483 மற்றும் ரூபா 50,060 மாத்திரமாக இருந்ததுடன் ஹோமாகம கமநல சேவை குழுவினால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 8,160 மற்றும் ரூபா 21,150 செலவு செய்யப்பட்டிருந்தும் எந்த வீட்டுத் தோட்ட வருமானமும் சேகரிக்கப்படாமையின் அடிப்படையில் வீட்டுத் தோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட | பதில் வழங்கப்படவில்லை. | செலவுகளுக்கு சமனான பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் முறையான திட்டத்தின் அடிப்படையில் செலவு செய்தல் இடம்பெறுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவுக்கு நேரொத்ததாக வீட்டுத் தோட்ட வருமானம் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | | |
| (ஈ) | 1977 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கோட்டே கமநல சேவை நிலையம் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் நிலத்தின் உரிமை கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு இதுவைர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கஹதுடுவ கமநல சேவை நிலையத்திற்குரிய காணி தற்காலிகமாக பொலிஸ் நிலையத்திற்கு ஒப்படைப்பப்பட்டிருந்ததுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் உரிய தரப்பினர்களுக்கிடையே கடிதங்கள் பரிமாற்றம் செய்யப்பட்டிருந்தும் அக்காணி கஹதுடுவ கமநல சேவை நிலையத்திற்கு மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கஹதுடுவ கமநல நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக கஹதுடுவ கனிஷ்ட வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானமாக பயன்படுத்துகின்ற காணியில் 30 பேச்சர்ஸ் இனை பயன்படுத்தும் உரிமை கஹதுடுவ கமநல சேவை குழுவின் நிறைவேற்று செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை அக்காணியை பெறுப்பேற்றல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. | நிலையத்திற்குச் சொந்தமான காணியை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கெஸ்பேவ கமநல சேவை நிலையத்திற்கச் சொந்தமாக 11 விற்பனை கடைகள் காணப்பட்டதுடன் அந்த விற்பனை கடைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கைகளின் குத்தகை கால எல்லை 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது முடிவடைந்திருந்தும் கமநல சேவை நிலையங்களுக்கும் குத்தகைதாரர்களுக்குமிடையே புதிய குத்தகை உடன்படிக்கையினை ஏற்படுத்திக்கொள்வதற்கு அல்லது காணப்படுகின்ற உடன்படிக்கையினை நீடிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2021 பெப்ரவரி 29 ஆந் திகதி நடைபெற்ற கமநல சேவை குழுக் கூட்டங்களின் போது விற்பனைக் கடைகளின் குத்தகை வாடகையை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிரந்தும் அத்தீர்மானத்திற்கு விற்பனைக் கடைகளை நடாத்திவரும் விவசாய அமைப்புக்கள் இணக்கிக்கொள்ளாததனால் 09 விற்பனை கடைகளால் செலுத்துவதற்கு இணங்கிக் கொண்ட பழைய குத்தகை உடன்படிக்கையிலுள்ள மாதாந்த வாடகையையும் செலுத்தாது விடப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை வருமானம் ரூபா 860,064 அவதானிக்கப்பட்டதுடன் புதிய குத்தகை உடன்படிக்கை இல்லாததன் அடிப்படையில் குத்தகைதாரர்கள் நிலுவை வாடகையினைச் செலுத்தாது விற்பனை கடைகளிலிருந்து நீங்கி கொண்டதனால் அந்த குத்தகை வாடகையை அறவீடு செய்தல் சிக்கலானதாக இருக்கும். | பதில் வழங்கப்படவில்லை. | குழுவின் வருமான உழைப்பினை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பல ஆண்டுகளாக முன்கொண்டு வரப்படுகின்ற 09 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 11,221,226 தொகையான பெறவேண்டிய 160 மீதிகளை அறவீடு செய்வதற்கும் ரூபா 58,012,240 தொகையான செலுத்த வேண்டிய 198 மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை திர்த்துவைப்பதற்கு அல்லது முறையான அங்கீகாரத்தினைப் பெற்று பதிவழிப்பதற்கும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை திர்த்துவைப்பதற்கும் அல்லது முறையான அங்கீகாரத்தினைப் பெற்று திரண்ட நிதியத்தில் செம்மையாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 03 கமநல சேவை குழுக்களின் 2022 ஆம் ஆண்டிற்கான விவசாயிகளின் 136 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அவற்றில் 23 முறைபாடுகளும் 2021 ஆம் ஆண்டின் போது 02 கமநல சேவை குழுக்களின் கிடைக்கப்பெற்ற 196 முறைபாடுகளில் 28 முறைப்பாடுகளுக்காகவும் தீர்வுகளை வழங்குவதற்கு முடியாதிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | விவசாயிகளின் முறைபாடுகளுக்காக தீர்வுகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டின் போதும் கொலன்னாவை கமநல சேவை அதிகாரப் பிரதேசத்தில் மாதம்கஹ வயல் என்ற பெயரிலான வயல் காணி மற்றும் 2018 ஆம் ஆண்டின் போதும் ஹோமாகம கமநல சேவை அதிகாரப் பிரதேசத்திலுள்ள கொஸ்கஹ வயல் என்ற பெயரிலான வயல் காணி கமநல அபிவிருத்தி ஆணையாளரின் அனுமதி இல்லாது மண்நிரப்பி மேடாக்குதல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அச்சந்தர்ப்பத்தில் மற்றும் தொடர்ந்தும் | பதில் வழங்கப்படவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளரின் எழுத்து மூல அனுமதி இல்லாது மண் நிர்ப்பி கட்டிடங்கள் நிர்மாணித்ததன் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் பின்னர் கொழும்பு |

| | | |
|---|---|---|
| அவ்வயல் காணகள் மேடாக்கப்பட்டு வருவதை நிறுத்துவதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கமநல அபிவிருத்தி திணைக்களம் போதுமான தடுப்பு நடவடிக்கைகளை எடுக்காமையால் தற்போது அவ்வயல் காணிகள் முழுமையாக மேடாக்கப்பட்டு கட்டிடடங்கள் நிர்மாணிக்கப்பட்டதன் மூலம் குறிப்பிட்ட இரு வயல் காணிகள் மற்றும் அதன் பக்கத்திலுள்ள வயல்கள் மீண்டும் நெற் பயிர்ச் செய்கை செய்ய முடியாத நிலையில் காணப்பட்டன. அந்நிலைமை அவ்வாறு காணப்பட்டபோது வயல் காணிகளை மேடாக்குவதற்கு ஆதரவளிக்கும் விதத்தில் மிகவும் தவறான முன் உதாரணத்தை அமைக்கும் வகையில் முதலில் குறிப்பிடப்பட்ட இரண்டு வயல் காணிகளுக்காக ரூபா 1,800,000 கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான வழக்கு நடவடிக்கைகள் நீக்கப்பட்டிருந்தது. | | மாவட்டத்திற்குப் பொறுப்பான கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் முன்கொண்டு செல்லப்படாது இழப்பீட்டுப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் பிழையினை முன் உதாரணமாக எடுத்துச் செல்லாமல் இருப்பதற்கு தேவையான ஒழுங்கு விதிகள் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். |

**3.7 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 06 கமநல சேவை குழுக்களின் 08 உழவு இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுத்தக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன. | பதில் வழங்கப்படவில்லை. | சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு முடியாத நிலைமை காணப்படுமாகவிருந்தால் அச்சொத்துக்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு அல்லது திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஒரு கமநல சேவை குழுவின் விவசாய இரசாயனப் பொருட்கள் ரூபா 22,465 தொகையும் 05 கமநல சேவை குழுக்களின் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக கிடைத்திருந்த 1302 லீற்றர் சேதன இரசாயன பசளைகளும் மற்றும் 852 லீற்றர் உயிரியல் திரவப் பசளைகளும் காலாவதியாகி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதிருந்தது. | பதிவழிப்பதற்கு அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது. | திரவப் பசளைகளை காலாவதியாவதற்கு முன்னர் விவசாயிகளுக்கு மத்தியில் பகிர்ந்தளிப்பதற்கு முடியாது செயலகத்தினூடாக திரவப் பசளைகளை வழங்கும் கம்பனிக்கு மீளத்திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.8 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 09 கமநல சேவை குழுக்கள் தொடர்பாக 311 கமத்தொழில் உற்பத்தி உதவியாளர் பிரிவுகள் உள்ளடங்கியுள்ளதுடன் அவற்றில் 08 கமநல சேவை குழுக்களின் 56 பிரிவுகளுக்காக 56 கமத்தொழில் உற்பத்தி உதவியாளர் வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும் கோட்டே கமநல சேவை குழு தொடர்பாக 21 பிரிவுகள் காணப்பட்டதுடன் அங்கீகரித்த 21 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் இருந்தும் அந்த கமநல சேவைக்களின் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளக்கூடிய 05 ஏக்கர் 05 ரூட் அளவான வயல் காணிகள் முழுவதும் ஒரு பிரிவிற்குரியதாக காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | பிரிவிற்குள் செயற்படும் வயல் காகணிகள் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கை நடவடிக்கைகளின் பிரகாரம் தேவையான கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு அல்லது வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2010 மே 04 ஆந் திகதிய 107 ஆம் இலக்க (திருத்தம் 2) கமநல சேவை ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் நிதி ஆண்டு முடிவடைந்து மூன்று மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான கமநல வங்கியின் நிதிக் கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 கமநல வங்கி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 04 கமநல வங்கிகளின் ரூபா 887,965 கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாது | வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது என ஒரு கமநல வங்கி | கடனை அறவீடு செய்வதற்காக தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | 39 கடனாளிகள் இணக்க சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் 02 கமநல வங்கிகளின் 08 கடனாளிகளுக்குரிய ரூபா 249,315 தொகை அறவீடு செய்ய முடியாது காணப்பட்டது. | தெரியப்படுத்தியிருந்ததுடன் ஏனைய கமநல வங்கிகளினால் பதில் வழங்கப்படவில்லை. | அனைத்து நடவடிக்கைகளும் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஒரு கமநல வங்கியில் பல ஆண்டுகளாக காணப்பட்டு வரும் சுழற்சி நிதிய கட்டுப்பாட்டுக் கணக்கின் ரூபா 287,171 மற்றும் சுழற்சி வட்டி கட்டுப்பாட்டுக் கணக்கின் ரூபா 689,507 மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் கடனை அறவீடு செய்ய முடியாததன் காணரமாக 2010 ஆம் ஆண்டின் பின்னர் வட்டியை கணிப்பீடு செய்தல் நிறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சுழற்சி நிதிய வட்டி கட்டுப்பாட்டுக் கணக்கிற்குரிய கடன்பட்டோர்களின் 66 மீதிகள் தொடர்பாக ரூபா 689,507 தொகையான அறவிட வேண்டிய பணத்தினை குறிப்பிட்டு பட்டோலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அப்பட்டோலையில் குறிப்பிட்டிருந்த அறவிட வேண்டிய கடன் மீதியை உறுதிப்படுத்துவதற்காக கடன்பட்டோர் பேரேட்டுக் கணக்குகள் அல்லது கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக மாவட்ட அலுவலகங்களின் ஆலோசனைகள் வேண்டப்பட்டுள்ளன. | போதியளவு தகவல்கள் மற்றும் ஆவணங்கள் பேணப்பட வேண்டியதுடன் கடனை வழங்குதல் மற்றும் அறவீடு செய்தல் முறையாக செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய 04/2012 ஆம் இலக்க சுற்றிக்கையின் 4.4.1 (iii) ஆம் பந்தியின் பிரகாரம் பங்கு விற்பனைகள் செய்ய முடியாததுடன் பங்குகளை ஒப்படைத்தல் மேற்கொள்ளப்படலாம். பங்கின் | எதிர்காலத்தில் தேடிப்பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும் என கஹதுடுவ கமநல சேவை குழு தெரியப்படுத்தியிருந்ததுடன் புலனாய்வு முடிவடைந்ததன் பின்னர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என கொஸ்கம கமநல சேவை குழு தெரியப்படுத்தியிருந்ததுடன் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிமையாளர் மரணமடைகையில் பங்குகளின் அடுத்துவரும் உரிமையாளர் பங்குடமையாளரினால் பெயரிடப்பட்டிருத்தல் வேண்டும். அந்த அடுத்துவரும் உரிமையாளர் பங்குதாரர் உயிருடன் இருக்கும் காலத்தில் மாற்றம் செய்யப்படலாம் என தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 04 கமநல வங்கிகளின் தற்போதைய பங்குரிமையாளர்களின் பட்டியலில் இருக்கும் நபர்கள் மரணமடைந்ததன் காரணமாக செயற்பாடற்ற பங்குடமையாளர்கள் இருக்கின்றார்கள். | ஏனைய கமநல சேவை குழுக்களினால் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ஈ) | 07 கமநல வங்கிகளின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பங்குரிமையாளர்களின் மீதிகளின் பொழிப்பு, வைப்பாளர்களின் மீதிகளின் பொழிப்பு, விவசாய அமைப்புக்களின் மீதிகளின் பொழிப்பு, மகளிர் விவசாய அமைப்புக்களின் மீதிகளின் பொழிப்பு, சிறுவர் வைப்புக்களின் மீதிகளின் பொழிப்பு என்பவற்றின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பங்குதாரர்களின் மற்றும் வைப்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் பங்குகளினதும் வைப்புக்களினதும் பெறுமதி மற்றும் வட்டியை கணிப்பீடு செய்தல் என்பவற்றின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தனித்தனி மீதிகளின் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கணிப்பீடு செய்யப்பட்ட உரிய வட்டியின் அளவு நாட்குறிப்புக்களின் மூலம் அறிக்கையிடப்பட்டிருந்தும் அவற்றிற்குரிய நாட்குறிப்பு வவுச்சர்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேடிப்பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும் என கஹதுடுவ கமநல சேவை குழு தெரியப்படுத்தியுள்ளதுடன் தனித்தனி மீதிகளைப் பராமரித்தல் மற்றும் நாட்குறிப்பு வைச்சர்களை சமர்ப்பிப்பதற்காக இதுவரை அறிவுறுத்தல்கள் கிடைத்திருக்கவில்லை என கொஸ்கம கமநல சேவை குழு தெரியப்படுத்தியுள்ளதுடன் ஏனைய கமநல சேவை குழுக்களினால் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுப்பாட்டு கணக்கு மீதிகள் தொடர்பாக தனித்தனி மீதிகளின் பட்டியல் பேணப்படுதல் வேண்டும். |